# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

செய்திமலர் மே 2022

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். புதிய மாதத்தைக்காணச் செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! நம்முடைய எல்லாக் காரியங்கிலும் ஆண்டவருடைய ஆசீர்வாதம் நம்மைச் சூழ்ந்து கொண்டதற்காகவும், தேவன் நம்முடைய வாழ்வில் அருளிச் செய்த பலவித நன்மைகளுக்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரம். வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும்,தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் (1 யோவான் 2:13) தேவனுக்கு ஸ்தோத்திரம்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையே போர் பல நாட்களாக நீடித்து வருகிறது. பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களும் சிறுபிள்ளைகளும் கொல்லப்படுகின்றனர் என்கிற செய்தியும், இரயில் நிலையத்தில் காத்திருந்தவர்களும் அநியாயமாய் கொல்லப்படுகின்றனர் என்ற செய்தியும் நம்மை மிகுந்த வேதனைக்குள்ளாக்குகிறது. தேவன் மனதிரங்கி இந்த நாடுகளின் தலைவர்களுக்கு மனதுருக்கத்தின் ஆவியை அருள தொடர்ந்து ஜெபிப்போம்.

நமது அண்டை நாடான இலங்கையை கர்த்தருடைய பாதத்தில் வைத்து ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பசியும் பட்டினியுமாயிருக்கிறார்கள். இச்சூழலில் சரியான உபகரணங்களின்றி மருத்துவமனைகள் இம்மக்களுக்கு சேவை செய்ய முடியவில்லை. அதனால் பல மருத்துவமனைகள் விரைவில் மூடப்படும் அபாயம் நிலவுகிறது. ஒவ்வொரு நாளும் 13 மணி நேர மின்தடை நிலவுகிறது. இச்சூழ்நிலையில் கருத்தாய் விரைந்து செயல்பட வேண்டிய மக்கள் தலைவர்களோ தங்கள் பொருளாதாரத்தைப் பெருக்குவதிலும், தங்கள் உறவினர்களை பிறநாடுகளில் குடியமர்த்துவதிலும் குறிக்கோளாய் உள்ளனர். இதன் தாக்கத்தால் அதிவிரைவில் இலங்கையைச் சார்ந்தவர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு வரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தேவன் இலங்கையை பொருளாதார சிக்கலிலிருந்து விடுவித்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

தமிழகத்திலுள்ள டாஸ்மாக் கடைகள் மூடப்பட ஜெபியுங்கள். கொரோனா வைரஸை விட அதிக தாக்கத்தை டாஸ்மாக் ஏற்படுத்துகிறது. மது அரக்கனால் அடிமை படுத்தப்பட்ட மாணவர்கள் பள்ளிகளில் செய்யும் அநாகரீகமான, விவரிக்க



சிறுவர் வேதாகமத்தை பெற்று கொண்ட பாண்டர்கவுடா சிறுவர்கள்

இயலாத செயல்களை அடிக்கடி செய்தித்தாள்கள் மூலமும் வலைதளங்கள் மூலமாகவும் அறிகிறோம். சமீபநாட்களில் மாணவியரும் இதற்கு அடிமைப்பட்டு வருகிறது மிகவும் வருந்தத்தக்கது. இதனால் பள்ளிகளில் ஆசிரிய, ஆசிரியைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது. போதைவஸ்துக்களை பயன்படுத்தும் எண்ணத்தை மக்கள் மனதிலிருந்து தேவன் அகற்றிப்போட போராடி ஜெபிப்போம். இவர்கள் கிறிஸ்துவண்டை மனந்திரும்பி விடுதலைபெற ஜெபிப்போம்.

நமது வியாரா பணித்தளத்திலுள்ள 4 மாவட்டங்களிலுள்ள ஆலயங்களில் சில ஆலயங்களின் சுவர்கள் களிமண் பூச்சு பூசப்பட்டு அங்கு ஆராதனைகள் நடைபெற்று வருகிறது. ஆலயங்கள் இல்லாத சில இடங்களில் வீட்டு ஜெபக்கூடுகைகளாகவே ஆராதனைகள் நடைபெறுகிறது. தற்சமயம் 200 பேர் கலந்து கொள்ளும் வீட்டு ஜெபக்கூடுகைக்காக, சுமார் 250 பேர் கூடி தேவனை ஆராதிக்கத்தக்க ஒரு ஆலயம் கட்ட தீர்மானித்திருக்கிறோம். அதற்காக அங்குள்ள ஓரே குடும்பத்தைச் சார்ந்த 4 பேர் இணைந்து தங்களது இடம் ஒன்றினைத் தந்துள்ளனர். தற்சமயம் அதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது. அதிக பண தேவைகள் உண்டு. தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். தேவராஜ்யத்தைக் கட்டும் பணியில் உங்கள் கரங்களையும் இணைத்துக் கொள்ள முன் வாருங்கள். தேவ நாமம் மகிமைப்படுவதாக.

பூர்கி பணித்தளத்தில் நாம் கட்டிவரும் ஊழியர் குடியிருப்பு, அதன் பணிகள் நிறைவடைந்த நிலையில் மே மாதம் 8ம் தேதி ஆலய ஆராதனைக்குப் பிறகு தேவ நாம மகிமைக்கு பயன்பட பிரதிஷ்டை செய்யப்படும். இதற்காக தங்கள் ஜெபத்தாலும் பொருளாலும் உதவிய தேவபிள்ளைகள் யாவரையும் தேவன் தாமே நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

வெயில் காலமாக இருக்கிறபடியால், நமது மிஷனெரிகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளிலுமிருந்து தேவன் அவர்களையும், குடும்பத்தையும் பாதுகாக்க விசேஷமாக ஜெபித்துக் கொள்ளுங்கள். இங்கிருந்து ஊழியத்தைத் தாங்கிவரும் அனைத்து தேவபிள்ளைகளுக்காகவும் தேவனை நன்றி நிறைந்த உள்ளத்தோடு துதிக்கிறோம். தேவன் தாமே உங்கள் அனைவரையும் தமது இரக்கத்தினாலும், மிகுந்த காருண்யத்தினாலும் மூடி சகல வியாதிகளுக்கும், தொற்று நோய்களுக்கும் விலக்கிப் பாதுகாப்பராக. ஆமென்.



சிறுவர் வேதாகமத்தை பெற்று கொண்ட வியாரா சிறுவர்கள்

# இந்த மாதச் செய்தி

இயேசு கிறிஸ்து தன்னை சுற்றியுள்ள ஜனங்களுக்கு மலைப்பிரசங்கத்தில் தொடங்கி பல போதனைகளைக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். சில வேளைகளில் கண்டிப்புடனும், சில வேளைகளில் உவமைகள் மூலமாகவும் மக்களுக்கு அவர்கள் நிலைகளுக்கு ஏற்ற வண்ணம் போதித்தார். முக்கியமாக யோவான் 13ம் அதிகாரம் முதல் 16ம் அதிகாரம் வரையுள்ள போதனைகள் இயேசு தம்முடைய சீஷர்கள் அவர்களுடைய வாழ்க்கையில் செயல்படுத்தும் வகையில் கடைசியாக கொடுத்த போதனைகள். தூய சிந்தையோடு இவைகளை தியானித்து, அதன்படி நம் வாழ்க்கையில் நடந்தால் நம் கிறிஸ்தவ வாழ்வு புதுப்பொலிவு பெறுவதோடு மட்டுமல்லாது அநேகருக்கு நாம் ஆசீர்வாதமாக இருப்பதையும் உணரலாம். தற்காலத்தில் காணப்படும் செழிப்பின் உபதேசங்கள் ஆசீர்வாதமான வார்த்தைகளுடன் முடிவடைவது போன்று, யோவான் 16:38 ல், " உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு - ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்ற ஆசீர்வாதத்தை நம்மில் பலரும் விரும்பாத ஆசீர்வாததை அவருடைய சீஷர்கள் என்கிற முறையில் நாம் அடைய வேண்டிய ஆசீர்வாதத்தைக் கூறி இயேசு தம்முடைய போதனையை நிறைவு செய்கிறார். சில போதனைகளைக் குறித்து இப்பகுதியில் தியானிக்க தேவன் நமக்கு ஞானத்தின் ஆவியை அருள்வாராக.

1. <u>தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் (யோவான் 14:1)</u>

சீஷன் என்பவன் தேவனிடத்தில் எப்பொழுதும் விசுவாசமாய் இருக்க வேண்டியவன். இவ்வுலக வாழ்விற்காக அல்ல. நமது குடியிருப்போ பரலோகில் உள்ளது என்கிற நம்பிக்கையை நாம் எப்பொழுதும் எல்லா சூழ்நிலையிலும் வெளிப்படுத்தவும், நம்மை சுற்றி உள்ள ஜனத்திற்கு நம் நடக்கையின் மூலம் நமது விசுவாசத்தை காண்பிக்கவும் அழைக்கப்படுகிறோம். யோவான் 11ம் அதிகாரத்தில் மரித்த லாசருவை உயிரோடு எழுப்பிய நிகழ்வில், விசுவாசத்தின் இரண்டு நிலைகளை இயேசு குறிப்பிடுவதைக் காண்கிறோம். மரித்த லாசருவின் வீட்டிற்கு இயேசு சென்ற போது லாசருவின் சகோதரி மார்த்தாள் இயேசுவிடம் நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவார் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு லாசருவை உயிரோடு எழுப்பும் உணர்வுடன், "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்று மறுமொழி கொடுக்கின்றார். அதற்கு மார்த்தாளோ, " உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன்" என்று பொதுவான விசுவாசத்தைக் குறித்த தனது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறாள். இந்த நிலை விசுவாசத்தின் ஒருபகுதியாகும். எல்லாருக்கும் தேவையான அடிப்படையான நிலையாகும். மரணத்திற்குப் பின்பு மிகச்சிறந்த வாழ்வு நமக்கு உண்டென்கிற நிலையை உணராதிருந்தால், மரணம் தான் நமக்கு ஏற்படும்



வீட்டுக் கூட்டம் - பிம்பிரி

இறுதிநிலை, அதோடு வாழ்வு நிறைவு பெறும் என்கிற நிலை நமக்கு ஏற்படும். அதன் முடிவு என்ன? நாம் இரட்சிக்கப்படுவதும், பரிசுத்தமாய் வாழ்வதும், நற்செய்தி அறிவிப்பதும் வீணானதாய் காணப்படும். ஆனால் தேவன் என்னை எழுப்புவார் என்கிற அசைக்க முடியாத விசுவாசம் நம்மில் நிலைகொண்டிருந்தால், எவ்விதமான நிகழ்வுகள் (விரும்பிய/விரும்பாத), சூழ்நிலைகள் (கடினமான/இலகுவான) நமக்கு ஏற்படினும் அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் நம் வாழ்வில் முன்னேறிச் செல்வோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மார்த்தாளோ தன்னுடைய விசுவாசத்தின் அடிப்படை நிலையையே வெளிப்படுத்துகிறாள்.

இந்த விசுவாசத்தின் அடிப்படை நிலையிலும் தேவன் லாசருவை உயிரோடு எழுப்ப சித்தங்கொண்டார். எனவே கல்லறையினிடத்தில் இயேசு சென்று கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். அதற்கு மார்தத்தாள், 'இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே,' என்றாள். சிலர் ஏன்? எதற்கு? என்று கேட்காமலே கல்லறையில் வைக்கப்பட்டிருந்த கல்லைப் புரட்டுகிறார்கள். இவர்கள் விசுவாச வாழ்வின் இரண்டாம் நிலையை அடைந்தவர்கள். "ஆண்டவர் சொன்னார் நான் செயல் படுகிறேன்" என்று துணிவுடன் செயல்படுகிறவனுடைய வாழ்வில் தேவனுடைய சித்தம் பரிபூரணமாய் நிறைவேறுவதை லாசரு உயிரோடு எழுந்த சம்பவம் மூலம் தெளிவாய் அறிந்து கொள்கிறோம்.

அன்பானவர்களே! அடிப்படை விசுவாசத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடைய நாம், நம்முடைய வாழ்வில் தேவ சித்தம் நிறைவேற அவருடைய வார்த்தைகளை கவனமாய் வாசித்து அதன்படி செய்ய அழைக்கப்படுகிறோம். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்கிற தேவ வார்த்தை நம்முடைய வாழ்வில் நிறைவேற பாத்திரவான்களாய் செயல்படுவோம்.

## 2. தேவனை அறிந்து கொள்ளுங்கள் (யோவான் 14:6,7)

இயேசு: "நானே வழியும் சத்யமும் ஜீவனுமாயிருக்கிறேன் ; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்" என்றார். இயேசுவின் இந்த உபதேச வாக்கியங்களை அறிந்தவர்கள் மெய்யாகவே அவரை அறிந்து கொண்டவர்களாவார்கள். உலக ஆசீர்வாதங்களுக்காக மாத்திரம் இயேசுவைப் பின்பற்றியவர்கள் அநேகர். இன்னும் பலர் தங்கள் பெற்றோர் பின்பற்றிய தேவனைப் பின்பற்றுகிறார்கள் இதைத்தான் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பெரும்பாலான யூதர்களும் பின்பற்றினார்கள். ஆனால் பிதாவாகிய தேவன், நமக்கு நித்திய ஜீவ வழியை அறிவிக்கவும், அதனை நாம் ஏற்றுக் கொண்டு, பரலோகத்தின் ஓர் அங்கமாக நம்மை நிலைநாட்டவும் இந்தப் பூ உலகுக்கு தம்முடைய சொந்த குமாரனையே அனுப்பினார். எனவே இயேசுவை அறிந்து கொள்ளுவதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை நாம் பெற்றுக்கொள்ளச் (எபேசியர் 1:8) செய்வதே பிதாவின் சித்தம்.

இவ்வுலக வாழ்க்கையில் நமக்கு கஷ்டங்கள் ஏற்படும் சூழலில்,"அவரோடே கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்" (II தீமோ 2:11) என்கிற வாக்குத்தத்தம் இன்னும் அதிகமாக இயேசுவைச் சார்ந்துகொள்ள

**ஜெப விண்ணப்பங்களை அனுப்ப..**

இம்மாத உபவாச ஜெபம் 30.05.2022 அன்று நமது அலுவலகத்தில் வைத்து நடைபெறும். தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்ப விரும்புகிறவர்கள் 9994040186 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். உங்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.

நம்மை ஊக்கப்படுத்துகிறது. எப்பொழுதும் நீதி, இரக்கத்தைக் காண்பிக்க அழைக்கப்படுகிறோம். "அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" (யோவான் 6:27) என்ற அருள் நாதரின் வாக்கு நம்மைக் குறித்த அவருடைய கரிசனையைக் காட்டுகிறது. ஆராதனை என்பது பார்வைக்கானது அல்ல. நம் ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும் ஒன்றிணைந்து தேவனை மகிமைப்படுத்துவதே ஆராதனை. இத்தகைய ஆராதனையில் தேவன் எதை வெளிப்படுத்துகிறாரோ அதை முழுமனதுடன் செய்ய தேவன் நம்மை எதிர்பார்க்கிறார். கலப்பையில் கைவைத்து பின்னிட்டு திரும்பாமல், நம்மை பின்னோக்கி இழுக்கும் உலக காரியங்களை தள்ளிவிட்டு, தேவன் நமக்கு நியமித்திருக்கிற பாதையில் பொறுமையோடு ஓடக் கடவோம்.

### 3. ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்: (யோவான்: 13:34)

"நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்". "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்". (யோவா 14:15) அதே வேளையில், "உலகம் உங்களை பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னை பகைத்தது என்று அறியுங்கள் "(யோவா 15:18) என்று வாசிக்கிறோம். ஆண்டவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளும் போது, தேவனிடத்திலும், நம்மைப் போன்ற சகவிசுவாசிகளிடத்திலும் அன்பு கூறுகிறோம். சில வேளைகளில், நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தும், நாம் செய்கிற காரியங்கள் தேவனுக்குப் பிரியமானதாயிருந்தும் கூட, சிலர் நம்மை தூஷிக்க நேரிடும். இவர்களில் சிலர் நாம் செய்கிறவற்றைத் தவறாக புரிந்து கொண்டிருப்பவர்கள். அவர்களிடம் நம் செய்ல்களை விவரிக்கும் போது அதை ஏற்றுக் கொள்வார்கள். மற்றும் சிலர் நாம் எவ்வளவாக தேவசித்தத்தை அறிந்து செயல்பட்டாலும் அதை வீண் என்று சொல்லி தூஷிக்கிறவர்கள் அதனை விட்டுவிடுங்கள்.

"திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்கிற தேவ வார்த்தையை மனதில் கொண்டவர்களாக ஜெபிக்கும் போது தேவ சமாதானம் நம் உள்ளத்தையும் இல்லத்தையும் ஆளுகை செய்யும்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கடைசியாக கற்பித்த கட்டளைகளில் மூன்று காரியங்களை தியானிக்க தேவன் கிருபை செய்தார். தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், அவரை அறிந்து கொள்ளுங்கள் மற்றும் அன்பாயிருங்கள். தேவன் தம்முடைய தயவுள்ள சித்தப்படி யாவரிடமும் அன்பு செய்யவும், அதன் மூலம் மக்களை தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக மாற்றி அவர்கள் வாழ்விலும் தேவ சித்தம் நிறைவேற்றப்படவும் நம்மை பயன்படுத்துவாராக! ஆமென்!



சுகம் பெற்ற சாட்சிகள்

## சாட்சி

கடந்த மார்ச் மாத இதழில் நம்முடைய பூர்கி பணித்தளத்தில் மிகுந்த சுகவீனமாக இருந்த ஒரு குழந்தை உட்பட 3 நபர்களைக் குறித்து எழுதியிருந்தோம். அவர்களுக்காக ஜெபிக்கவும் உதவிக்கரம் கொடுக்கவும் வேண்டியிருந்தோம். தங்கள் ஜெபத்தாலும் பணத்தாலும் உதவி செய்த தேவபிள்ளைகள் அனைவருக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தற்சமயம் சிறுவன் பூரண சுகம் அடைந்துவருகிறான். சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நபர் பரிபூரண சுகமடைந்து ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு சாட்சி சொல்லிவருகிறார். மற்றும் ஒருவர் கால் வீக்கம் நீங்கி சுகமடைந்துள்ளார். தேவபிள்ளைகளாகிய நீங்கள் மனமுவந்து கொடுத்த பணஉதவிகள் தேவையிலிருந்த அவர்களுக்கு கொடுக்கப்பட்டாயிற்று. மிகுந்த மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் அதனைப்பெற்றுக் கொண்டார்கள். அற்புதங்களைச் செய்கிற இயேசுவுக்கே எல்லாத் துதியும் உண்டாவதாக.

## ஓர் அன்பின் வேண்டுகோள்

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்றின் தாக்கத்தினால் நமது பணித்தளங்களில் உள்ள சிறுவர்களுக்கு விடுமுறை வேதாகம பள்ளி (VBS) நடத்த இயலாமல் முடங்கியது. இந்த வருடத்தில் நமது பணித்தளங்களில் விடுமுறை வேதாகம பள்ளிகள் (VBS) நடத்த திட்டமிட்டு வருகிறோம். இந்த ஆண்டு மே மாதத்தில் நமது இயக்கத்தின் பணித்தளங்களிலுள்ள சுமார் 1000 சிறுவர்களுக்கு VBS நடத்தி, அவர்களுக்கு சிறந்த முறையில் இயேசுவின் அன்பை எடுத்துக்கூறி சிறுவர்களின் நண்பனாம் இயேசுவண்டை அவர்களை வழிநடத்த ஊழியர்கள் செயல்பட்டு வருகிறார்கள். VBS நடைபெறும் நாட்களில் சிறுவர்களுக்கு VBS புத்தகங்கள் மற்றும் மதிய உணவு வழங்குவதற்கு பணத்தேவைகள் உண்டு. இந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். இச்சிறுவர்கள் இந்தி, மராத்தி, குஜராத்தி, வார்லி, மாடியா, கோண்டு ஆகிய மொழி பேசும் மக்களினத்தைச் சார்ந்தவர்கள்.

1000 சிறுவர்களுக்கு 50 ரூபாய் வீதம் - ரூ. 50,000/- தேவைப்படுகிறது. தேவன் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி 1 குழந்தைக்கோ, 5 குழந்தைகளுக்கோ அல்லது 10 குழந்தைகளுக்கோ அதற்கு அதிகமாகவோ குழுவாகவோ தனி நபராகவோ உதவி செய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதிற்கு இடங்கொடுங்கள் அவைகளைத் தடைபண்ணாதிருங்கள் தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது." லூக்கா 18-16



லெந்து கால கூட்டம் - வியாரா

Cate

# ஜெபவிண்ணப்பங்கள்

- பூர்கி கிராமத்தில் மாடியா மக்கள் தவிர ஆண்டவரை அறியாத இதர ஜாதி மக்களும் அநேகர் உண்டு. இவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. ஆனாலும் இவர்களுடைய சமூகத்தை சேர்ந்தவர்கள் கடுமையான கட்டுப்பாடுகளை வைத்துள்ளனர். இந்த கட்டுப்பாடுகள் தளரந்து சுவிஷேசத்திற்கு ஓர் நல்ல வாசலை ஆண்டவர் ஏற்படுத்தித் தர ஜெபிப்போம்.
- பூர்கி பணித்தளத்தில் மோஹன் ஒண்ட்ரே என்ற 52 வயது முதியவர் திடீரென்று ஏற்பட்ட பக்கவாத நோயால் அவதிப்பட்டு வருகிறார். உடல் முழுவதும் ஒருவிதமான எரிச்சல் இருப்பதாகவும் கூறுகிறார். நமது ஊழியர்கள் இவருக்காக விசேஷித்த ஜெபத்தை ஏறெடுத்து வருகிறார்கள். இவர் சுகம் பெற ஜெபிப்போம். இவர்கள் இயேசுவண்டை வர தடையாய் இருக்கும் சமூக கட்டுப்பாடுகள் மாற ஜெபிப்போம். இவர்கள் மூலமாய் அந்த கிராமம் முழுவதும் ஆண்டவரை ஏற்றுகொள்ள ஜெபிப்போம்.
- பூர்கியைச் சேர்ந்த மங்கு ஈச்சாமி என்ற 54 வயது முதியவர் பைத்தியம் போல சிலநேரம் பேசுகிறார். வீட்டை விட்டு வெளியே ஓடுகிறார் இவரது பிள்ளைகள் இவரை எத்தனையோ மந்திரவாதிகளிடம் கொண்டுசென்றும் சுகம் கிடைக்கவில்லை. இந்த குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். இவர்கள் ஊர்த்தலைவரின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் இயேசுவண்டை வர தயங்குகின்றனர். இவர்களுடைய கல்லான மனம் கரைக்கப்படவும். இயேசுவின் அன்பை உணரவும் நாம் ஜெபிப்போம்.
- பூர்கி பணித்தளத்தில் எடுஸ்கோந்தி என்ற கிராமத்தைச் சேர்ந்த ராஜ்குமார் என்பவருக்கு மாடியா மொழி வேதாகமம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர் விசுவாசி அல்ல, ஆகிலும் நம்மிடத்தில் வேதாகமம் வேண்டுமென்று தாமாகவே கேட்டு பெற்றுக்கொண்டார். என் தாய்மொழியில் இந்த வேதத்தை படிக்க ஆசைப்படுகிறேன் என்றார். தேவன் இவரை இரட்சிக்கும்படி நாம் ஜெபிப்போம்.
- வியாரா மாவட்டம் டோக்கர்வா கிராமத்தைச் சேர்ந்த ரமிலாபேன் மற்றும் பிரமிளா பேன் இருவரும் சாலையில் நடந்து கொண்டிருந்த போது, பின்னால் வந்த இருசக்கர வண்டி மோதி, சரள் கற்கள் மேல் மல்லாக்க விழுந்ததினால், ரமிலா பேனின் மூளையில் கற்கள் பதிந்து விட்டன. அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு, 3லட்சத்திற்கும் மேலாக செலவாகி இருக்கிறது. மிகவும் ஏழ்மை மற்றும் பின்தங்கிய நிலையிலிருக்கும் இவ்விசுவாசிக்கு உதவிகள் கிடைக்கும் படி ஜெபிப்போம்.

காரஞ்சா கிராமத்தில் வீட்டுக் கூட்டம்



# ஜெபவிண்ணப்பங்கள்

- பாண்டர்கவுடா பணித்தளத்தில் மாதூரி என்கிற பெண்ணுக்கு 10 வருடமாக குழந்தை பாக்கியம் இல்லை. ஏற்ற நேரத்தில் தேவன் அவருக்கு இரங்கி குழந்தை பாக்கியத்தை அருள, அதன் மூலமாக அவர்கள் குடும்பத்தில் சந்தோஷமும் சமாதானமும் மலர ஜெபியுங்கள்.
- நாக்பூரில் உள்ள பரசுராம் (48) என்ற சகோதரருக்கு சரியாக தூக்கம் இல்லாமல் மிகவும் வேதனையில் தவித்து வருகிறார். அவருடைய தூக்கத்தில் கெட்ட சொப்பனங்கள் வருவதாகவும் கூறுகிறார். இந்த சூழ்நிலை மாறவும் இவர் விசுவாசத்தில் இன்னும் வளரவும் ஜெபியுங்கள்.
- சாய்கோடா பகுதியில் உள்ள தீபா என்ற சகோதரி ஒவ்வாமை (Allergy) பிரச்சனையினால் மிகவும் சிரமப்படுகிறார். அவருக்கு தேவன் நல்ல சுகத்தை தரவும் அவருடைய வீட்டின் பிரச்சனைகள் மாறவும் சமாதானமான சூழ்நிலை உருவாகவும் ஜெபியுங்கள்.
- தற்போது வெயிலின் தாக்கம் மஹாராஷ்டிரா மாநிலத்தில் அதிகமாக உள்ளது. இதனால் பலர் சரீர பிரச்சனைகளை சந்திக்கின்றனர். ஆண்டவர் நல்ல கால சூழ்நிலையை ஏற்படுத்தி தரவும் நமது விசுவாசிகளுக்கு நல்ல சுகத்தை தரவும் ஜெபியுங்கள்.

## ஊழிய அறிவிப்பு

புதிய நிதி ஆண்டில் நமது ஊழியர்கள் பிரயாணம் பண்ணுவதற்கு ஏதுவாக ஒரு சில ஊர்களுக்கு உங்கள் இல்லம் தேடி வரும் நமது ஊழியர்கள் மாற்றப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு நீங்கள் தொடர்ந்து ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்பரின் பணியில்,

**Dr. G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**

**இந்த மிஷனெரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் ECS மூலம் பணம் அனுப்பி உதவலாம்.**

Canara bank, Vannarpettai Branch, Tirunelveli
A/c Name: Western India Mission
A/c No: 2952101007959
IFSC Code: CNRB0002952

Axis Bank, KTC Nagar, Branch, Tirunelveli
A/c Name : Western India Mission
A/c No : 922010016879568
IFSC Code : UTIB0003601

**(பணம் அனுப்பப்பட்ட விபரத்தையும், M.O மூலம் பணம் அனுப்பி ஊழியங்களுக்கு உதவிசெய்வோரும் 9944306154 என்ற செல்போனுக்கு SMS மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)**

உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:


| | | | |
|---|---|---|---|
| Dr. ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. ஃபெலிக்ஸ் | 9600992654 |
| சகோ. கோயில்பிள்ளை | 9159827209 | | |

*Our Address:*

**Western India Mission,**

**C-98, East Rahmath Nagar, Tirunelveli 627 011.**

**வெஸ்டன் இந்தியா மிஷன் சி–98 கிழக்கு ரஹ்மத் நகர் திருநெல்வேலி 627 011**

இணையதள முகவரி : https://westernindiamission.com



DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182